ஞாயிறுதோறும்
தினமணியுடன்...
தினமணி கொண்டாட்டம்

தினமணி

செவ்வாய்க்கிழமை, 26 மே 2026

ஞாயிறுதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தமிழகத்தைச் சேர்ந்த 7 பேருக்கு பத்ம விருதுகள்: குடியரசுத் தலைவர் வழங்கினார்

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடமிருந்து பத்ம விருதுகளைப் பெற்றுக் கொண்ட (வலமிருந்து) மருத்துவர் ஹெச்.வி.ஹண்டே, எழுத்தாளர் சிவசங்கரி, ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி விஜய் குமார், மறைந்த ஓவியர் ஆர்.கிருஷ்ணனுக்கு (கிட்னா) வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதைப் பெற்றுக் கொண்ட அவரின் மனைவி சுசீலா, மூத்த வானொலி ஒலிபரப்பாளர் ராமமூர்த்தி ஸ்ரீதர், ஓதுவார் என்.சுவாமிநாதன், மருத்துவர் கே.ஆர்.பழனிசாமி.

புது தில்லி, மே 25: தமிழகத்தைச் சேர்ந்த 7 பேர், புதுச்சேரியைச் சேர்ந்த ஒருவர் உள்பட 66 பேருக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு திங்கள்கிழமை பத்ம விருதுகளை அளித்தார்.

நிகழாண்டில் 5 பேருக்கு பத்ம விபூஷண், 13 பேருக்கு பத்ம பூஷண், 113 பேருக்கு பத்ம ஸ்ரீ விருதுகள் என மொத்தம் 131 பேருக்கு பத்ம விருதுகள் அளிக்க குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்தார். இந்த விருதுகள் இரண்டு சுற்றுகளாக வழங்கப்பட உள்ளது.

முதல் சுற்றில் 66 பேருக்கு திங்கள்கிழமை விருதுகள் அளிக்கப்பட்டன. புது தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு விருதுகளை வழங்கினார்.

அப்போது தமிழகத்தைச் சேர்ந்த இரைப்பை குடல் நிபுணரான மருத்துவர் கே.ஆர்.பழனிசாமிக்கு பத்ம பூஷண், முதுபெரும் மருத்துவரும், முன்னாள் தமிழக சுகாதாரத் துறை அமைச்சருமான ஹெச்.வி.ஹண்டேவுக்கு பத்ம ஸ்ரீ விருது அளிக்கப்பட்டது. நீலகிரியின் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த மறைந்த ஓவியர் ஆர்.கிருஷ்ணனுக்கு (கிட்னா) அறிவிக்கப்பட்ட பத்ம ஸ்ரீ விருதை அவரின் மனைவி சுசீலா பெற்றுக்கொண்டார்.

ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி விஜய் குமார், எழுத்தாளர் சிவசங்கரி, இந்திய சமூகவானொலியின் தந்தை என்றழைக்கப்படும் மூத்த வானொலி ஒலிபரப்பாளர் ராமமூர்த்தி ஸ்ரீதர், தமிழ் பண்ணிசையில் திருமுறை பாடி வரும் புகழ்பெற்ற ஓதுவார் என்.சுவாமிநாதன், புதுச்சேரியைச் சேர்ந்த சிலம்பப் பயிற்சியாளர் பழனிவேல் ஆகியோருக்கு பத்மஸ்ரீ விருது அளிக்கப்பட்டது.

மறைந்த ஹிந்தி நடிகர் தர்மேந்திராவுக்கு அறிவிக்கப்பட்ட பத்ம விபூஷண் விருதை அவரின் மனைவி ஹேமமாலினி பெற்றுக்கொண்டார். இதேபோல உத்தர பிரதேசத்தை சேர்ந்த வயலின் கலைஞர் என்.ராஜத்துக்கு பத்ம விபூஷண் விருது அளிக்கப்பட்டது. உத்தரகண்ட் முன்னாள் முதல்வர் பகத்சிங் கோஷியாரி, கோட்டக் மகிந்திரா வங்கியின் நிறுவனர் உதய் சுரேஷ்குமார் கோட்டக் ஆகியோருக்கு பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது. ஆந்திரத்தை சேர்ந்த சம்ஸ்கிருத புலவரும், காஞ்சிபுரம் ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகா வித்யாலயா வேந்தருமான வேம்பட்டி குடும்ப சாஸ்திரி, இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் ஹர்மன்ப்ரீத் கௌருக்கு பத்மஸ்ரீ விருதளிக்கப்பட்டது.

மொத்தம் 66 பேருக்கு பத்ம விருதுகள் அளிக்கப்பட்ட நிலையில், நிகழ்ச்சியின் மற்றொரு சுற்றில் எஞ்சியவர்களுக்கு பின்னர் விருதுகள் அளிக்கப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்பட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

பத்ம விபூஷண் விருதைப் பெற்றுக் கொண்ட (இடமிருந்து) உத்தர பிரதேசத்தை சேர்ந்த வயலின் கலைஞர் என்.ராஜம், பத்மஸ்ரீ விருதைப் பெற்றுக் கொண்ட வேம்பட்டி குடும்ப சாஸ்திரி, மறைந்த ஹிந்தி நடிகர் தர்மேந்திராவுக்கு அறிவிக்கப்பட்ட பத்ம விபூஷண் விருதைப் பெற்றுக்கொண்ட அவரது மனைவி ஹேமமாலினி, பத்மஸ்ரீ விருதைப் பெற்றுக் கொண்ட புதுச்சேரியை சேர்ந்த சிலம்பப் பயிற்சியாளர் பழனிவேல்.

முதல்வர் குறித்து அவதூறு: மென் பொறியாளர் கைது

திருநெல்வேலி, மே 25: தமிழக முதல்வர் ஜோசப் விஜய் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பியதாக மென் பொறியாளரை போலீஸார் கைது செய்தனர்.

பாளையங்கோட்டை, புதுப்பேட்டை வடக்குத் தெருவைச் சேர்ந்த சுவாமிநாதன் மகன் ஜேம்ஸ் ராஜா (31). பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் மென் பொறியாளராக உள்ளார். இவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் கடந்த சில ஆண்டுகளாக திமுகவுக்கு ஆதரவாக காணொலிப் பதிவுகளை வெளியிட்டு கருத்துகளை தெரிவித்து வந்தார்.

இந்நிலையில், சில நாள்களுக்கு முன்பு தமிழக முதல்வர் ஜோசப் விஜய்யை அவதூறாகப் பேசி, பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில், தனது சமூகவலைதளப் பக்கத்தில் காணொலி வெளியிட்டாராம்.

இதுகுறித்து பாளையங்கோட்டை போலீஸார் வழக்குப் பதிந்து, ஜேம்ஸ் ராஜாவை ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

மணல் கடத்தலில் தொடர்பு: தலைமைக் காவலர்கள் 4 பேர் பணியிட மாற்றம்

கடலூர், மே 25: கடலூர் அருகே மணல் கடத்தலில் தொடர்பு இருப்பது தெரியவந்ததையடுத்து, தலைமைக் காவலர்கள் 4 பேரை பணியிடமாற்றம் செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் திங்கள்கிழமை உத்தரவிட்டார்.

கடலூர் மாவட்டத்தில் சட்ட விரோதமாக நடைபெறும் மணல் கடத்தல் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அதன்தொடர்ச்சியாக, கடந்த சில நாள்களுக்கு முன்பு பண்ருட்டி போலீஸார் நடத்திய சோதனையில், மணல் கடத்தலில் ஈடுபட்டதாக 8 பேர் கைது செய்யப்பட்டனர். இதையடுத்து அம்மாப்பேட்டை, நத்தம், மணம்தவிழ்ந்தபுத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆய்வு மேற்கொண்டனர். அப்பகுதிகளில் செயல்படும் சட்டவிரோத மணல் குவாரிகளை மூட மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்தார். கடத்தலுக்கு உடந்தையாக இருந்தவர்கள் குறித்தும் விசாரணை நடத்த உத்தரவிட்டார்.

அதன்படி போலீஸார் நடத்திய விசாரணையில், புதுப்பேட்டை காவல் நிலையத்தில் பணியாற்றி வரும் தலைமைக் காவலர்கள் ராஜேஷ், கிருஷ்ணா, தேவகிருஷ்ணன் மற்றும் பிரபாகரன் ஆகியோருக்கு மணல் கடத்தலில் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து குற்றச்சாட்டு எழுந்த 4 பேரையும் கடலூர் ஆயுதப்படைக்கு பணியிடமாற்றம்செய்து மாவட்டகாவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் திங்கள்கிழமை உத்தரவிட்டார்.

கனரா வங்கி Canara Bank

சிண்டிகேட் Syndicate

விற்பனை அறிவிப்பு

கடன் வசூல் மேலாண்மைக் கிளை, கோயமுத்தூர்.

கடனீட்டு சொத்துக்கள் ஒருக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, கனரா வங்கியின் ARM கிளையின், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் (கீழே பட்டியலில் குறிப்பிட்டபடி) செய்து கொள்ளப்பட்டது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதுவைகளுக்காக 'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே' மற்றும் 'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி' என்கிற நிலையில் கீழ்வரும் விபரப்படி விற்பனை செய்யப்படுகிறது.

1.கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : திரு.M.ரகுபதி (கடன்தாரர்), த/பெமுத்துசாமி, 4/19, குட்டைத்தோட்டம் பாதை, ராவத்தூர், இருகூர், கோயம்புத்தூர் – 641 103. திரு.M.தியாகராஜன் (கடன்தாரர்), த/பெமுத்துசாமி, 4/19, குட்டைத் தோட்டம் பாதை, ராவத்தூர், இருகூர், கோயம்புத்தூர் – 641 103. திருமதி.J.ரோஹினி (கடன்தாரர்), க/பெ.ரகுபதி, 4/19, குட்டைத் தோட்டம் பாதை, ராவத்தூர், இருகூர், கோயம்புத்தூர் – 641 103. திருமதி.ராமாத்தாள் (உத்தரவாதமளித்தவர்), 4/19, குட்டைத் தோட்டம் பாதை, ராவத்தூர், இருகூர், கோயம்புத்தூர் – 641 103.
மொத்த கடன்பாக்கி : 19.05.2026–ம் தேதி வரை ரூ.59,55,197.85 (ரூபாய் ஐம்பத்து ஒன்பது லட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரத்து நூற்று தொண்ணூற்று ஏழு மற்றும் பைசா எண்பத்து ஐந்து மட்டும்) மற்றும் 20.05.2026 தேதியிலிருந்து வங்கிக்கு ஏற்படும் பின்வட்டி மற்றும் பிற இதர கட்டணங்களுடன்.

சொத்து விபரம் : சொத்தின் உரிமையாளர் : M.ரகுபதி மற்றும் M.தியாகராஜன் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சிங்காநல்லூர் சார் பதிவு மாவட்டம், பல்லடம் தாலுகா, இருகூர் கிராம க.ச.எண்.629/1பியில் உள்ள நிலங்கள் வீட்டுமனைப் பிரிவாக மாற்றப்பட்டதிலடங்கிய மனை எண்.17ன் எல்லைகளும், அளவுகளும் வருமாறு : மனை எண்.16க்கு வடக்கு, கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, மீத நிலத்துக்குக் கிழக்கு, மனை எண்கள் 18, 19 மற்றும் 20க்கு மேற்கு. அளவுகள் : கிழமேல் வடபுறம் 40 அடி, கிழமேல் தென்புறம் 26 அடி, தென்வடல் மேல்புறம் 83 அடி, தென்வடல் கிழபுறம் 97 அடி. ஆக உள்ள 2970 சதுர அடி வில்லிரணம் அல்லது 6 சென்ட் 356 சதுர அடி வீட்டுமனை நிலத்துடன் அதில் கட்டப்பட்டுள்ள சிமெண்ட் ஷீட் கூரை வேய்ந்த கட்டிடமும், அதன் கதவுகள், சன்னல்கள், மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு, அவற்றின் காப்புத் தொகைகள் மற்றும் பிற அனைத்து இணைப்புகள் உடன் பொது வழித்தட உபயோக உரிமையுடன் பிற பொது உபயோக உரிமைகள் முதலியன சேர்ந்த சொத்து. கதவு எண்.19, சொத்து வரிவிதிப்பு எண்.4655, 4வது வார்டு, மின் இணைப்பு எண்.929, 709, 685, குடிநீர் இணைப்பு எண்.2874 (குட்டைத் தோட்டப் பாதை) உடன் உள்ள இச்சொத்து இருகூர் பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. Asset ID 200034533720
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.81,15,000/– முன்வைப்புத் தொகை : ரூ.8,11,500/– ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/–
முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் : 12.06.2026 காலை 11.00 மணிக்கு முன்னதாக.
சுவாதீன நிலை : அடையாள (Symbolic) சுவாதீனம். நோட்டீஸ் தேதி : 22.05.2026

2.கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : 1. M/s.ஃப்ளேம் டெக் (உரிமையாளர் : திருமதி.பர்கத்னீசா) (கடன்தாரர்), கதவு எண்.15, பாஸ்கர் நாயுடு சந்து –2, வார்டு 02, கோயம்புத்தூர் டவுன், கோயம்புத்தூர் வடக்கு இணை சார் பதிவு அலுவலகம், கோயம்புத்தூர்– 641001. 2. திருமதி.பர்கத்னீசா (கடன்தாரர்), க/பெS.ஃபரூக், கதவு எண்.4–A, J.K.கார்டன், தெற்கு உக்கடம் கிராமம், கோயம்புத்தூர் தாலுகா, கோயம்புத்தூர்– 641 001. 3. திரு.S.ஃபரூக் (அடமானதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்), த/பெ.கமான் பாய், கதவு எண்.4–A, J.K.கார்டன், தெற்கு உக்கடம் கிராமம், கோயம்புத்தூர் தாலுகா, கோயம்புத்தூர் – 641 001.
18.05.2026 தேதி வரை நிலுவைத் தொகை : ரூ.1,05,22,897.83 (ரூபாய் ஒரு கோடியே ஐந்து லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஏழு மற்றும் பைசா எண்பத்து மூன்று மட்டும்) மற்றும் 19.05.2026 தேதியிலிருந்து வட்டி, பிற செலவுகள்.

சொத்து விபரம் : நிலம் மற்றும் கட்டிடம் அடங்கிய அதன் பகுதி கீழே விவரிக்கப்பட்டுள்ளது. சொத்தின் உரிமையாளர் திரு. S ஃபரூக் – கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா மற்றும் கோயம்புத்தூர் நகர பகுதி டவுன் சர்வே எண்.1000/1, பகுதி டவுன் சர்வே எண்.2/1280, டவுன் சர்வே வார்டு எண்.2, பாஸ்கர நாயுடு சந்தில் S.வீரபோயனுக்குச் சொந்தமான வீட்டுக்கு வடக்கு, ராஜ நாயுடுவுக்குச் சொந்தமான சந்துக்குக் கிழக்கு, சுந்தரியம்மாளுக்குச் சொந்தமான வீட்டுக்குத் தெற்கு, குஞ்சு அப்துல்லாவுக்குச் சொந்தமான வீட்டுக்கு மேற்கு. இதன் நடுவே கிழமேல் வடபுறம் 34 அடி, கிழமேல் தென்புறம் 34 அடி, தென்வடல் கிழபுறம் 20 அடி, 3 அங்குலம், தென்வடல் மேல்புறம் 21 அடி 9 அங்குலம், ஆக உள்ள 714 ச.அடி (அ) 1 சென்ட் 278 ச.அடி அல்லது 66.33 ச.மீ நிலத்துடன் அதிலுள்ள கட்டிடமும் அதன் அனைத்து தடவழி உரிமைகளுடன் பிற பொது உரிமைகள் முதலியனவற்றுடன் பிற அனைத்து இணைப்புகளும் அதாவது மின் இணைப்பு அதன் காப்புத் தொகை– கதவு எண்.14/15, பாஸ்கர நாயுடு சந்து எண்.2, வரிவிதிப்பு எண். 82249076, வார்டு எண். 82, மின் இணைப்பு எண்.03–001–007–1626 உள்ளிட்டவை சேர்ந்த சொத்து, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.46,41,000/– முன்வைப்புத் தொகை : ரூ.4,64,100/– ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/–
முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் : 12.06.2026 காலை 11.00 மணிக்கு முன்னதாக.
சுவாதீன நிலை : கொள்நிலை (Physical) சுவாதீனம். நோட்டீஸ் தேதி : 22.05.2026

மின்-ஏலத் தேதி மற்றும் நேரம் : 12.06.2026
காலை 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை.
(ஒவ்வொன்றிற்கும் 5 நிமிட கால அளவிலான அளவற்ற நீட்டிப்புகளுடன் – விற்பனை நிறைவு பெறும் வரை)
சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம் : 11.06.2026
காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு மின்–ஏலத்தோடு தொடர்புடைய கனரா வங்கியின் இணையதளத்தின் (www.canarabank.com) 'இ–ஆக்ஷன் லிங்க்'கில் அணுகவும். அல்லது கனரா வங்கியின் கோயமுத்தூர், கடன் வசூல் மேலாண்மைக் கிளையின் முதன்மை மேலாளரை எந்தவொரு வேலை நாளிலும், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். (போன் : 0422-2555655; மொபைல் : 94890 43584)
மின்னஞ்சல் : cb4712@canarabank.com
மின் ஏலத்தின் தலைவாயில் (போர்டல்) : https://baanknet.com/

அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி

இடம் : கோயமுத்தூர்

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழக்கண்ட கிளைகளில் 16.06.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பினறி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கோயம்புத்தூர், 6வது தெரு காந்திபுரம், 0100020730012738, 2844, அண்ணூர் கோயம்புத்தூர், 0121550730017364, 7372, 7498, 7979, அவினாசி, 0102530700756048, 8854, அவினாசி பேருந்து நிலையம் , 0132500730012690, செட்டிப்பாளையம் கோயம்புத்தூர், 0120790700038337, 8678, 0120790730014759, 7351, சிந்தாமணிபுதூர், 0129730700020813, 0906, 0129730730014411, 4879, ஈச்சனேரி கோயம்புத்தூர், 0116050700046577, 8540, 9228, 9801, 0116050730011084, 1889, 2147, கணபதி ராஜேந்திர பிரசாத் தெரு, 0101980700778961, 0101980730010958, காந்தி பார்க், 0108880700063917, 4475, 0108880730021522, காந்திபுரம் கோயம்புத்தூர், 0124590700034055, 4178, 4828, 0124590730015037, கோல்டுவின் பஸ் நிறுத்தம் கோயம்புத்தூர், 0128460700019901, 0256, 0624, 0798, காமராஜர் ரோடு, 0111770700034276, 4439, 0111770730033040, 3763, காரமடை கோயம்புத்தூர், 0127620700025751, 6059, 6234, 6303, 6336, 6354, 6378, 0127620730026712, காரமடை ரோடு மேட்டுப்பாளையம், 0101250700777100, 7281, 0101250730020926, 2593, 5717, கவுண்டம்பாளையம், 0115040700030006, கிணத்துக்கடவு, 0111740700026086, 0111740730002894, கோவில்மேடு கோயம்புத்தூர், 0121810700024105, 0121810730020713, குனியமுத்தூர், 0109650700074362, 4874, 5012, 6350, 7751, 0109650730019374, மேட்டுப்பாளையம், 0125100700033828, 0125100730036613, ஒப்பணக்கார கோயம்புத்தூர், 0100520700082922, 3458, 4003, 4115, 4148, 0100520730018616, 9075, 9365, பி என் புதூர் கோயம்புத்தூர், 0117310700028945, 0338, 1053, 1249, 1250, 0117310730018873, பல்லடம், 0101480700083804, பீளமேடு கோயம்புத்தூர், 0127800700028585, 8615, 0127800730015140, 6088, பெரியநாயக்கன்பாளையம், 0103790700054918, 7495, 0103790730025658, 6194, 6195, 7145, பேரூதுறை, 0126720730017856, பொள்ளாச்சி, 0100970700811155, 1243, 1264, 2405, 2662, 3991, 0100970730019095, 9253, புளியக்குளம் கோயம்புத்தூர், 0128600730013845, ராமநாதபுரம், 0100620700100064, 0100620730018889, 0933, 1463, 1466, ரத்தினபுரி கோயம்புத்தூர், 0114070700044005, 4330, சாய்பாபா காலனி, 0102300700048743, 0799, சமலபுரம், 0126850700032694, 4122, சாரதா மில் ரோடு சுந்தராபுரம், 0108570700062797, 4834, 5314, சரவணம்பட்டி கோயம்புத்தூர், 0116860730015846, 5891, 5892, 6041, சிங்காநல்லூர் கோயம்புத்தூர், 0127370700024649, 0127370730022397, 2398, சிவானந்தபுரம் சரவணம்பட்டி, 0112940700045453, 0112940730016923, 8370, சோமனூர் கோயம்புத்தூர், 0118300730036895, சவுரிபாளையம் கோயம்புத்தூர், 0111230730015112, 5404, 5583, 5813, சுந்தராபுரம், 0115470700048880, 1998, திருப்பூர், 0100630700783583, திருப்பூர் பி என் ரோடு, 0103410700783147, 4397, உடுமலைப்பேட்டை பொள்ளாச்சி மெயின் ரோடு, 0101200700784950, 4951, 4996, 0101200730009893, 1144, வீரபாண்டிபிரிவு கோயம்புத்தூர், 0123620700038881, 0123620730015987, 6251, 9834, வெங்டராமண் தெரு பொள்ளாசி, 0115540700041920, 2727, 2909, 0115540730012324, ஈரோடு, அந்தியூர் ஈரோடு, 0114630700059067, 3881, 3908, 4179, 4325, 4521, 5324, 6637, 6688, 6776, 0114630730025681, 7341, அப்பக்குடல் ஈரோடு, 0118370700046289, 7208, 7991, பவானி, 0101880700766540, 6732, 6832, 7927, 0101880730017979, 7980, 8047, 8048, பவானி மேட்டூர் ரோடு, 0120620700029185, சென்னிமலை ஈரோடு, 0128360700035160, 6077, 8968, 9927, 0128360730027478, 7854, 0716, 1572, 1720, 1721, சித்தோடு, 0126140700050263, 0126140730016319, 6790, 8513, தாராபுரம், 0101860700767139, 7556, 8107, ஈரோடு, 0100790700059217, 0100790730023299, கோபிசெட்டிபாளையம், 0112680700052965, 0112680730031060, கலிங்கராயன்பாளையம், 0129580700041159, 4581, 4783, 5250, 5255, 0129580730020619, 2261, காங்கயம், 0101800700763250, 5058, 5094, 0101800730034335, 6326, 6642, கொடுமுடி ஈரோடு, 0131020700023626, 5844, 5895, 5924, 6072, 6092, 6205, 6293, 6428, 6560, 6652, 0131020730020787, 0789, 1163, 1504, 1506, 1511, மூலப்பாளையம் ஈரோடு, 0123040700045552, 0123040730024757, 5588, 5589, நாச்சியப்பா ரோடு, 0118620700022241, 0118620730035717, நம்பியூர் ஈரோடு, 0128650730014680, பெருந்துறை ஈரோடு, 0111870700047810, 8738, 8766, 8782, 8793, 9241, 9286, 9324, 9983, 0111870730025527, 5663, புஞ்சைபுளியம்பட்டி, 0102600700762141, 2599, 3606, 0102600730014067, 5219, சத்தி ரோடு ஈரோடு, 0110590700035487, சத்தியமங்கலம் பஸ் ஸ்டாண்டு, 0123310700048480, 0123310730028180, 9889, 9890, சிவகிரி ஈரோடு, 0120580700029403, சூளை ஈரோடு, 0121380700048162, 8777, 8978, 9283, 9485, 0031, 0121380730023869, சுரம்பட்டி , 0127700700053697, 8451, நீலகிரி, குன்னூர், 0101240700783760, 3778, 3781, 4918, 5002, 5746, 6710, 0101240730016712, எட்டினீஸ் ரோடு ஊட்டி, 0124160700019722, 0124160730011769, 1880, குடலூர், 0103310700747240, 7722, 8426, 0103310730009155, கோத்தகிரி ஊட்டி, 0124700700025559, 5560, 5781, 0124700730012596, 3160, 3206, ஊட்டி, 0102520700740089, 0159, 0102520730009078, 0324, 0684, பண்டலூர் நீலகிரி, 0131300700027348, ராமநாதபுரம், திருப்பூர், அனுப்பர்பாளையம், 0111470700060762, 1633, 2257, காலேஜ் ரோடு திருப்பூர், 0124960700046764, 6916, 9647, 0124960730022943, காலனி பஸ் ஸ்டாப் திருப்பூர், 0111910700042157, 2158, 0111910730025276, குன்றத்தூர், திருப்பூர், 0117130700031700, மாணிக்கபுரம் ரோடு பல்லடம், 0132310700023596, 0132310730021646, 2004, 5351, 0006, முனியப்பன கோவில் திருப்பூர், 0130730700016201, 6646, 6944, பழைய பஸ் ஸ்டாண்டு, 0110360700030533, 1994, 2207, பரப்பாளையம், திருப்பூர், 0128640700032197, பெரிச்சிபாளையம் திருப்பூர், 0111030700061502, 0111030730023811, பிட்சம்பாளையம், 0121640700028170, உடுமலைப்பேட்டை, 0115380730012714, 4447, வீரபாண்டிப்பிரிவு திருப்பூர், 0121820730035292, 6358, வெள்ளக்கோயில் திருப்பூர், 0117340700028748, 1623, 1695, 0117340730020714, 0835, 1869,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

DINAMANI, Coimbatore Phone: 2317853; Fax: 0422-2311320 RNI Reg. No. 53675/91. Printed and Published by N. Gopalan on behalf of Express Publications (Madurai) Private Ltd., at Express Press, Old No.152 / New No.110, Pankaja Mill Road, Coimbatore - 641 045. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Coimbatore. Vol. 37, No. 145
COPYRIGHT: Express Publications (Madurai) Private Ltd., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.